மேட்டூர்-ஆத்தூர் குடிநீர் திட்டம்.

426—(*வினா எண் 9977) திரு. செ. செம்மலை: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உலக வங்கி உதவியுடன் நிறைவேற்றப்படவிருக்கும் மேட்டூர்-ஆத்தூர் குடிநீர் திட்டப்பணி எப்போது தொடங்கப்பட விருக்கிறது?

(ஆ) மேச்சேரி, தாரமங்கலம், ஓமலூர் ஆகிய ஒன்றியங்களில் எந்தெந்த கிராமங்களுக்கு குடிநீர் வழங்கப்படவிருக்கிறது?

(இ) அந்தக் கிராமங்களில் குடிநீர் வசதி பெறும் குடியிருப்புகள் எவை எவை?

(ஈ) இத்திட்டத்தினால் பயனடையும் மக்கள் தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு விவர அறிக்கை @ அவைமுன் வைக்கப் பட்டுள்ளது.

திரு. செ. செம்மலை: தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் சென்ற மாதம் சேலத்திற்கு வந்திருந்தபோது இந்தத் திட்டத்திற்கான அடிக்கல்லை நாட்டினார்கள். அவர் தொட்டது துலங்கும், கை பட்டது விளங்கும் என்ற அடிப்படையில் திட்டப்பணிகள் முடுக்கி விடப்பட்டிருப்பதை நான் நன்றியுணர்வோடு பாராட்டுகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் நான் கேட்டுக்கொள்ள விரும்புவது, எவ்வளவு காலத்திற்குள் இந்தத் திட்டப்பணிகள் முடிக்கப்பட திட்டமிடப்பட்டிருக்கிறது? திட்டமிடப்பட்டுள்ள அந்த காலகட்டத்திற்குள் திட்டப்பணிகள் முற்றுப்பெறும் வகையில் பார்த்துக்கொள்ளப்படுமா?

@ 505—51 ஆம் பக்கங்களில் இணைப்பு ஆக அச்சிடப் பெற்றுள்ளது.

1987 ஏப்ரல் 21]

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, இந்தத் திட்டப் பணிகள் 37,68,00,000 ரூபாய் செலவில் நடைபெறவிருக்கின்றன. இந்தத் திட்டப் பணிகள் 1991 ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்குள் முடிக்கப்பட்டு, பயனுக்குக் கொண்டுவரப்படும்.

திரு. கே. பாலாஜி: தலைவரவர்களே, உலக வங்கி உதவியுடன் நடத்தப்படுகின்ற குடிநீர்த் திட்டங்கள் முடிவுபெற நீண்ட காலமாவது ஏன்? காஞ்சிபுரத்தில் இப்படிப்பட்ட ஒரு திட்டம் ரூ. 4,20,00,000 செலவில் நிறைவேற்றப்பட ஆய்வு முடிந்து மூன்று ஆண்டுகள் ஆகியும் இன்றுவரையில் பணிகள் தொடங்கப்படாமல் இருக்கின்றன. இப்படிப்பட்ட நிலைமை இல்லாமல் உடனடியாக குடிநீர்த் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இனியாகிலும் ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, உலக வங்கித் திட்டம் என்பது நீண்டதூர திட்டமாகப் போடப்படுவது. இந்தத் திட்டத்திலேகூட 11 நகரங்களும் 3 நகராட்சிகளும் இணைக்கப்பட்டிருக்கின்றன. திட்டத்தைப் போட்டு, குழாய்களைப் பதிக்கப்போனால் நிலச் சொந்தக்காரர்கள் சண்டை போடுகிறார்கள்; கோர்ட்டில் வழக்கு போடுகிறார்கள். இப்படிப்பட்ட பல்வேறு காரணங்களால் காலதாமதம் ஏற்படுவது இயற்கை. அதைத் தவிர்ப்பது அவ்வளவு சுலபமான காரியம் அல்ல. ஆகவே, முடிந்த அளவு திட்டங்களை வேகமாக முடிக்க குடிநீர் வடிகால் வாரியம் முயற்சி எடுத்துவருகிறது.

திரு. சி. பழனிமுத்து: தலைவரவர்களே, உலக வங்கி உதவியுடன் மேட்டூரிலிருந்து ஆத்தூர் வரை குடிநீர்த் திட்டப் பணியைத் தொடங்கவிருப்பதாகக் கூறினார்கள். அந்தப் பணி ஆத்தூருடன் நின்றுவிடாமல் தலைவாசல் வரையில் நீட்டிக்கப்படுமா? அந்தத் திட்டப்பணிகள் நூறு கிலோமீட்டருக்கும் அதிகமாக இருப்பதால் திட்டப்பணிகளைப் பல பகுதிகளாகப் பிரித்து, விரைவிலே பணிகளைப் பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா? ஆத்தூருக்குத் தண்ணீர் வந்து சேர எத்தனை பூஸ்டர் ஸ்டேஷன்கள் அமைக்கப்பட வேண்டும் என்ற விவரங்களை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது தலைவாசல் வரையில் நீட்டிக்கிற திட்டம் இல்லை. ஆத்தூர் வரையில்தான் திட்டம் இருக்கிறது. அதோடு எத்தனை பூஸ்டர் என்பதெல்லாம் டெக்னிக்கல் டீட்டெய்ல்ஸ். அதுபற்றிப் பார்த்துத்தான் சொல்லலாம். ஒவ்வொரு இடத்திலும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டி இந்தத் திட்டத்தை நிறைவேற்ற இருக்கிறார்கள். எத்தனை காண்ட்ராக்டர்கள் என்பதைப் பொறுத்தவரையில் இனிமேல் டெண்டர் போடப்பட்டபிறகுதான் அதைப்பற்றிய விவரங்களை அறிவிக்க இயலும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தஞ்சைப் பகுதியில் அணுசக்தி தயாரிக்க கனிமங்கள்.

427—(* வினா எண் 10292) திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சைப் பகுதியில் அணுசக்தி தயாரிக்கப் பயன்படும் கனிமங்கள் கிடைப்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) மோனஸைட் என்ற கனிமத்தில் உள்ள தோரியம் அணுசக்தி தயாரிக்க உபயோகிக்கப்படுகிறது. மோனசைட் என்ற கனிமம் தோரியம் ஆக்ஸைடுடன் கூடிய சீரியம் என்ற உலோக பாஸ்பேட்டாகும். இக்கனிமம், இல்மனைட், கார்னட், ரூடைல் சிர்கான் போன்ற கன கனிமங்களுடன் சிறிய அளவில் நாகூர், தரங்கம்பாடி, பூம்புகார், புதுப்புரம் கடற்கரைப் பகுதியில் கிடைக்கின்றன. இக்கன கனிமங்கள் கடல் அலைகளினால் கடற்கரை மணலில் ஒதுக்கப்படுகின்றன.

திரு. க. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மோனசைட் கனிமங்கள் நாகூர், பூம்புகார் போன்ற கடற்கரை ஓரங்களில் கிடைப்பதாக மாண்புமிகு